
தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 161 | 4 Pages | 8.1.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 161 | 4 பக்கங்கள் | 8.1.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்தல் அதனான் வரும்**

**விளக்கம்:**
யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும், தீமையான விளைவுகள் அச் சினத்தாலேயே ஏற்படும்.

## அசாம்: நிலக்கரி சுரங்கத்தில் சூழ்ந்த வெள்ளம்; 15 தொழிலாளர்கள் நிலை என்ன?



கவுகாத்தி, ஜன.8

அசாமின் மலைப்பிரதேச மாவட்டங்களில் ஒன்றான திமா ஹசாவோவில் உள்ளடங்கிய பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இதில், வேலை செய்து வந்த தொழிலாளர்களில் 15 பேர் வெளியே வர முடியாமல் சிக்கி கொண்டனர்.

அவர்கள் வேலை செய்து வந்தபோது, சுரங்கத்திற்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. ஒரு சிலர் சுரங்கத்தில் இருந்து தப்பி வெளியே வந்தனர். அவர்கள் சுரங்க உரிமையாளர் மற்றும் உள்ளூர் போலீசாரிடம் சுரங்க விபத்து பற்றி கூறியுள்ளனர்.

இதனை உறுதி செய்துள்ள முதல்மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா, மீட்பு பணியில் மாநில மற்றும் தேசிய பேரிடர் பொறுப்பு படை அதிகாரிகள் சம்பவ பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர் என கூறியுள்ளார். ராணுவ உதவியும் கோரப்பட்டு உள்ளது என அவர் கூறியுள்ளார்.

இந்த சுரங்கம் நகரில் இருந்து தொலைவில், உட்பகுதியில் அமைந்துள்ளது. இதனை பயன்படுத்தி கொண்டு சட்டவிரோத வகையில் சுரங்கம் செயல்பட்டு வந்துள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பள்ளிக்கு நடந்து சென்ற சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தவர் கைது

மும்பை, ஜன.8

மராட்டிய மாநிலம் தானே மாவட்டத்தில் உள்ள காஷிமிரா பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி, தினமும் பள்ளிக்கு நடந்தே சென்று வருவது வழக்கம். இதை நோட்டமிட்ட 40 வயது நபர் ஒருவர் தினமும் சிறுமியை பின்தொடர்ந்து சென்று அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதனால் கடும் மன உளைச்சலுக்கு ஆளான சிறுமி, தனக்கு நடந்த கொடுமை பற்றி பெற்றோரிடம் கூறி அழுதுள்ளாள்.

இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த சிறுமியின் குடும்பத்தினர், மறுநாள் அந்த நபர் வரும் சாலையில் மறைந்திருந்து கண்காணித்து வந்தனர். அப்போது வழக்கம்போல் அந்த நபர் சிறுமியை பின்தொடர்ந்து வந்து பாலியல் சீண்டலில் ஈடுபட்டார். இதைக்கண்டு ஆத்திரம் அடைந்த சிறுமியின் குடும்பத்தினர் அவரை மடக்கி பிடித்து தர்மஅடி கொடுத்தனர். மேலும் அவரது ஆடைகளை களைந்து நிர்வாணமாக்கி போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

இது குறித்து போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்த போலீசார், சிறுமியின் குடும்பத்தினரிடம் இருந்து அந்த நபரை மீட்டு கைது செய்தனர். குடும்பத்தினர் அவரை தாக்கி நிர்வாணமாக்கி சாலையில் அழைத்து சென்ற வீடியோ தற்போது சமூக வலைதளத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

## 2வது மாடியில் இருந்து தவறி விழுந்து ஐஐஎம் மாணவர் பலி : பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது சோகம்



பெங்களூரு, ஜன.8

கர்நாடக மாநிலம் பெங்களூருவி ஐஐஎம் (இந்திய நிர்வாக மேலாண்மை கல்லூரி) உள்ளது. இங்கு குஜராத்மாநிலம்சூரத்தைசேர்ந்தநிலேய்கைலாஷ்பாய் (வயது 28) எம்பிஏ 2ம் ஆண்டு படித்து வந்தார்.

இந்நிலையில், கடந்த 4ம் தேதி கைலாஷ்பாய்க்கு 29வது பிறந்தநாள். இதையொட்டி கல்லூரி விடுதியில் சகமாணவர்களுடன் சேர்ந்து கைலாஷ் தனது பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடினார்.

இதன் பின்னர், தனது அறைக்கு திரும்பியபோது 2வதுமாடியில்இருந்துகைலாஷ்பாய்தவறிவிழுந்தார். இந்த சம்பவத்தில் கைலாஷ் சம்பவ இடத்திலேயே ரத்தவெள்ளத்தில்உயிரிழந்தார். கைலாஷ்உயிரிழந்தது அடுத்தநாள்காலைமாணவர்களுக்குதெரியவந்தது. இதுகுறித்துபோலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் கைலாசின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இச்சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது மாணவன் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஆன்லைன் மோசடியில் ரூ. 1.50 லட்சத்தை இழந்த இளம்பெண் விஷம் குடித்து தற்கொலை

லக்னோ, ஜன.8

உத்தரபிரதேச மாநிலம் சஹரன்பூர் மாவட்டத்தை சேர்ந்த இளம்பெண் ராணி (வயது 26). இவருக்கு சமீபத்தில் நிச்சயதார்த்தம் நடைபெற்றுள்ளது. விரைவில் திருமணம் நடைபெற உள்ளது. இந்நிலையில், ராணிக்கு கடந்த சில நாட்களுக்குமுன் ஆன்லைன் லாட்டரியில் 42 லட்ச ரூபாய் பரிசு கிடைத்துள்ளதாக மெசேஜ் வந்துள்ளது. 42 லட்ச ரூபாய் பரிசு தொகையை பெறவேண்டுமானால்வரி தொகையாக 1.50 லட்சரூபாய் முன்பணம் செலுத்த வேண்டுமென ஆன்லைன் மூலம் மெசேஜ் வந்துள்ளது. அந்த மெசேஜை நம்பிய ராணி தனது வங்கி கணக்கில் சேமித்து வைத்திருந்த பணம், உறவினர்கள், பக்கத்து வீட்டுக்காரர்களிடம் கடன் வாங்கி ரூ. 1.50 லட்சம் பணத்தை மெசேஜ் வந்த லிங்கில் செலுத்தியுள்ளார். அப்போது, 42 ஆயிரம் ரூபாய் செலுத்தியதற்கான ரசீது மெசேஜில் வந்துள்ளது. இதையடுத்து லாட்டரி தொகையான ரூ. 42 லட்சம் வந்துவிடும் என அவர் நம்பியுள்ளார். பின்னர், ஓரிரு நாட்கள் கழித்து தனது வங்கி கணக்கை பார்த்துள்ளார். அதில், லாட்டரி தொகையான 42 லட்ச ரூபாய் வரவு வைக்கப்படவில்லை. இதனால், அதிர்ச்சியடைந்த ராணி தான் ஆன்லைன் மோசடியில் ஏமாற்றப்பட்டதை உணர்த்துள்ளார். 1.50 லட்ச ரூபாய் இழந்ததால் மிகுந்த மன உளைச்சலில் இருந்த ராணி விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டார். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் தற்கொலை செய்துகொண்ட ராணியின் உடலை கைப்பற்றிபிரேதபரிசோதனைக்குஅனுப்பிவைத்தனர். மேலும், இச்சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உரையை வாசிக்காமலேயே கவர்னர் போயிருப்பது சிறுபிள்ளைத்தனமானது: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜன.8

இந்த ஆண்டின் முதல் சட்டசபை கூட்டத்தொடர் இன்று தொடங்கி நடைபெற்றது. இந்த முதல் கூட்டத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்த இருந்தார். இந்த நிலையில் கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு தேசிய கீதம் பாட வேண்டும் என்று கவர்னர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார். ஆனால் தமிழ்த்தாய் வாழ்த்துபாடப்பட்டுள்ளது. இதற்கு அதிருப்தி தெரிவித்து கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில், உரையாற்றாமல் சட்டசபையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி புறப்பட்டுச் சென்றார். இதனால் அவையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



இந்தநிலையில்கவர்னர்உரையை வாசிக்காமலேயே போயிருப்பது சிறுபிள்ளைத்தனமானது என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

அரசியல் சட்டப்படி, ஆண்டின் தொடக்கத்தில் அரசின் உரையை மாநில கவர்னர் வாசிப்பது சட்டமன்ற ஜனநாயகத்தின் மரபு! அதை மீறுவதையே தனது வழக்கமாக வைத்துள்ளார் கவர்னர் ஆர்.என்.ரவி. கடந்த ஆண்டுகளில் இருந்ததை வெட்டியும், இல்லாததை ஒட்டியும் வாசித்த கவர்னர் இம்முறை வாசிக்காமலேயே போயிருப்பது சிறுபிள்ளைத்தனமானது.

தமிழ்நாட்டு மக்களையும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும், நூற்றாண்டு கண்ட தமிழ்நாடு சட்டப்பேரவையையும் தொடர்ந்து அவமதிக்கும் கவர்னரின் செயல் அவர்வகிக்கும் பதவிக்கு அழகல்ல. "தனது அரசியல் சட்டக்கடமைகளைச் செய்யவே மனமில்லாதவர் அந்தப் பதவியில் ஏன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்?" என்பதே அனைவர் மனதிலும் எழும் வினா! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கவர்னர் உரையாற்ற கூடாதென்று திட்டமிட்டு அவரை வெளியேற வைத்துள்ளனர்: எடப்பாடி பழனிசாமி தாக்கு

சென்னை, ஜன.8

இந்த ஆண்டின் முதல் சட்டசபை கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்றது. இந்த முதல் கூட்டத்தில் கவர்னர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்த இருந்தார். இந்த நிலையில் கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு தேசிய கீதம் பாட வேண்டும் என்று கவர்னர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார். ஆனால் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. இதற்கு அதிருப்தி தெரிவித்து கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில், உரையாற்றாமல் சட்டசபையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி புறப்பட்டுச் சென்றார். இதனால் அவையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கூட்டத்தொடரை முன்னிட்டு சட்டசபைக்கு வருகை தந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தை குறிக்கும் வகையில் "யார் அந்த சார்?" என்ற வாசகத்துடன் கூடிய பேட்ஜ் அணிந்து வந்தனர். மேலும் சட்டசபையில் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல்வன்கொடுமைசம்பவம் தொடர்பாக, அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து அவர்கள் சட்டசபையில் இருந்து குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்டனர்.



இந்த நிலையில் சட்டசபை வளாகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

கவர்னர் புறக்கணித்துச் செல்லவில்லை. அவர் உரையாற்றக் கூடாதென்று திட்டமிட்டு வெளியேற வைத்துள்ளனர். கவர்னர் உரை காற்றடித்த பலூன்போன்று இருப்பதை தவிர உள்ளே முக்கியமான கருத்து எதுவும் இல்லை. கவர்னர்உரையில் தி.மு.க. அரசு சுய விளம்பரம் தேடி உள்ளது. 4 ஆண்டுகளாக எந்த திட்டமும் இல்லை. பேசியதையே பேசுகிறது தி.மு.க.

அண்ணாபல்கலைக்கழகமாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் ஒட்டுமொத்த இந்தியாவே "யார் அந்த சார்?" என்று கேட்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று அ.தி.மு.க.தான் வழக்கு போட்டது. நீதிமன்றம் தாமாக வழக்கைவிசாரிக்கவில்லை. அ.தி.மு.க.தான் வழக்கு தொடர்ந்தது.

ஜனநாயக முறைப்படி போராட்டம் நடத்த அ.தி.மு.க. ஆட்சியில் அனுமதி கொடுத்தோம். ஆனால் தி.மு.க. அரசு கூட்டணி கட்சிகளுக்கு கூட போராட்டம் நடத்த அனுமதி கொடுப்பதில்லை. கூட்டணிக் கட்சிகளுக்கே இந்த நிலை என்றால் எதிர்க்கட்சிகளின் நிலையை உணர வேண்டும். திட்டத்திற்கு பெயர் மாற்றுவது மட்டுமதான் தி.மு.க. ஆட்சியில் சாதனையாக உள்ளது. போதை மாநிலமாக உள்ளது தமிழகம். போதைப்பொருள் நடமாட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். 500 பள்ளிகளை தனியாருக்கு தாரைவார்க்கும் நிலையில் இன்றைய ஆட்சியில் உள்ளது" இவ்வாறு அவர் கூறினார்.

# இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீட்டை 7 சதவீதமாக உயர்த்த வேண்டும்: தவ்ஹீத் ஜமாத் மாநாட்டில் தீர்மானம்

சென்னை, ஜன.8

இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீட்டை 7 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் ஏகத்துவ எழுச்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் வடசென்னை மாவட்டம் சார்பாக பெரம்பூரில் ஏகத்துவ எழுச்சி மாநாடு நடந்தது. மாவட்ட தலைவர் காஜா மொய்தீன் தலைமை தாங்கினார். மாநில தலைவர் அப்துல் கரீம், மாநில பொதுச்செயலாளர் முஜிபு ரஹ்மான், மாநில துணைத் தலைவர் தாவூத் கைசர், மேலாண்மை குழு உறுப்பினர் சுலைமான் சிறப்புரையாற்றினர். மாநாட்டில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதில், "அண்ணா பல்கலைக்கழகத்திற்குள் பல்கலைக்கழக மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக ஞானசேகரன் கைது செய்யப்பட்டுள்ளார். இப்பிரச்னைக்கு தீர்வு என்பது இது போன்ற பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு கொடுக்கப்படும் கடும் தண்டனை விதிக்க வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்களை விரைந்து முடிக்க சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும். சாதிவாரி கணக்கெடுப்பை எடுத்து இஸ்லாமியர்களின் இடஒதுக்கீட்டை 7 சதவீதமாக தமிழக அரசு உயர்த்த வேண்டும். வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை அரங்கேற்ற நினைக்கும் ஒன்றிய பாஜ அரசை வன்மையாக கண்டிக்கிறோம்.




நீட்டிக்கப்பட்டுள்ள ஜெபிசி இந்த மசோதாவை கைவிட பரிந்துரைக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் அம்பேத்கரை இழிவுபடுத்தும் வகையில் பேசிய அமித் ஷாவின் பேச்சை வன்மையாக கண்டிக்கிறோம்.


இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்திய ஜனநாயக போராட்டங்களை முடக்கும் விதமாக மக்களவை எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டவர்களின் மீது பொய் வழக்கு தொடுத்திருப்பது பாசிச ஆட்சியின் உச்சம். இது போன்ற ஒன்றிய அரசின் எதேச்சதிகார மனநிலையை வன்மையாக கண்டிக்கிறோம் உள்ளிட்ட தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன என மாவட்ட செயலாளர் அன்சாரி கூறினார்.

# டெல்லியில் ஆட்சிக்கு வந்தால் பெண்களுக்கு மாதம் ரூ.2,500 வழங்கப்படும்: - காங்கிரஸ் வாக்குறுதி

புதுடெல்லி, ஜன.8

டெல்லியில்பிப்ரவரி இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. பா.ஜ, ஆம்ஆத்மி, காங்கிரஸ் கட்சிகள் இங்கு தனித்து போட்டியிடுகின்றன. இந்த தேர்தலில் வென்றால் கர்நாடகாவில் காங்கிரஸ் அரசு வழங்குவது போல் டெல்லியில் உள்ள பெண்களுக்கு மாதம் ரூ.2500 வழங்கப்படும் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக டெல்லியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த கர்நாடக துணை முதல்வர்



டி.கே.சிவக்குமார் கூறுகையில், 'டெல்லியில்காங்கிரஸ் வென்றால் மாதம் தோறும் பெண்களுக்கு ரூ.2500 வழங்கும் திட்டம் புதிய அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் செயல்படுத்தப்படும். டெல்லியில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். தேசிய அளவிலும், மாநில அளவிலும் காங்கிரஸ் என்ன வாக்குறுதி அளித்ததோ, அதை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். டெல்லியிலும் அதை நாங்கள் நிறைவேற்றப் போகிறோம்' என்றார்.

# சென்னை உட்பட 3 இடங்களில் சர்வதேச பலூன் திருவிழா



சென்னை, ஜன.8

தமிழக அரசின் சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் சார்பில் பொங்கல் பண்டிகையையொட்டி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் சர்வதேச பலூன் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது.

10வது ஆண்டாக தமிழகத்தில் இந்த பலூன் திருவிழா நடத்தப்படுகிறது. இந்த முறை சென்னை, மதுரை, பொள்ளாச்சி ஆகிய 3 இடங்களில் பலூன் திருவிழா நடக்கிறது.

சென்னையை அடுத்த கோவளம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள திருவிடந்தையில் ஜனவரி 10 முதல் 12ந் தேதி வரையிலும், பொள்ளாச்சி ஆச்சிபட்டியில் 14 முதல் 16ந் தேதி வரையிலும், மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கீழக்கரையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு ஜல்லிக்கட்டு அரங்கில் ஜனவரி 18, 19 ஆகிய தேதிகளிலும் இந்த விழா நடக்க உள்ளது.

இது குறித்து சுற்றுலாத்துறை அதிகாரி கூறும்போது, 'மதுரையில் முதன்முறையாக பலூன் திருவிழா நடக்க உள்ளது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரியா, பிரேசில், பெல்ஜியம், ஜப்பான், தாய்லாந்து, வியட்நாம் உள்ளிட்ட பல நாடுகளின் ஹாட் ஏர் (வெப்ப காற்று) பலூன்கள் பறக்க விடப்பட உள்ளன. இதற்காக பல்வேறு நாடுகளில் இருந்து ஹாட் ஏர் பலூன் பைலட்டுகள் தமிழகம் வந்துள்ளனர்.

மேலும் மிக்கி மவுஸ், டைனோசர் உள்பட பல்வேறு வடிவங்களிலும், தனித்துவமான வண்ணங்களிலும் பலூன்கள் பறக்க விடப்படுகிறது' என்றார்.

# முகவரி கேட்பது போல் நடித்து பெண்ணிடம் தங்க சங்கிலி பறிப்பு

திருப்பூர், ஜன.8

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் காலேஜ் ரோடு பகுதியை சேர்ந்தவர் நந்தகுமார். சாப்ட்வேர் என்ஜினீயர்.

இவரது மனைவி பிருந்தா தேவி (வயது 33). இவர் நேற்று முன்தினம் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஆசாமி ஒருவர் பிருந்தா தேவியிடம் முகவரி கேட்டுக் கொண்டிந்தார்.

அதற்கு பிருந்தா தேவி பதில் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே அந்த ஆசாமி திடீரென்று அவர் கழுத்தில் அணிந்திருந்த 7½ பவுன் தங்க சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றார். அப்போதுதான் அந்த ஆசாமி முகவரி கேட்க வரவில்லை என்றும் முகவரி கேட்பது போல் நடித்து நகையை பறிக்க வந்த ஆசாமி என தெரியவந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த பிருந்தா தேவி திருடன், திருடன் என்று கூச்சல் போடவும் அருகில் உள்ளவர்கள் ஓடி வந்து அந்த ஆசாமியை துரத்தி சென்றனர். ஆனால் அவரை பிடிக்க முடியவில்லை.

இது குறித்து தாராபுரம் போலீசில் புகார் செய்யப்பட்டது. புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார், சம்பவ இடத்தில் அமைந்துள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்து விசாரித்து வருகின்றனர். முகவரி கேட்பது போல் நடித்து பெண்ணிடம் தங்க நகை பறித்துச் சென்ற சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தென்காசி: தனியார் எரிவாயு நிறுவன வாகனத்தில் திடீர் தீ விபத்து



தென்காசி, ஜன.8

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் தனியார் எரிவாயு நிறுவனம் உள்ளது. இந்நிறுவனத்திற்கு சொந்தமான வாகனத்தில் நேற்று இரவு சங்கரன்கோவில் நகரில் சென்றுகொண்டிருந்தபோது திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

வாகனத்தில் சிலிண்டர்கள் இல்லாதபோது இந்த தீ விபத்து ஏற்பட்டது. உடனடியாக, வாகனத்தில் இருந்து டிரைவர் கிழே இறங்கி உயிர் தப்பினார்.

இந்த தீ விபத்து குறித்து தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து வாகனத்தில் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். வாகனத்தில் சிலிண்டர்கள் இல்லாதபோது தீ விபத்து ஏற்பட்டதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

# திருப்பத்தூர்: ரெயிலில் இருந்து தவறி விழுந்து ஐ.டி. ஊழியர் பலி



திருப்பத்தூர், ஜன8

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையை அடுத்த பார்சம்பேட்டை ஜெயமாதா நகரை சேர்ந்தவர் சுதாகர் (வயது 48). சென்னையில் ஐ.டி. நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். நேற்று முன்தினம் சென்னையில் இருந்து மங்களூர் செல்லும் மங்களூர் எக்ஸ்பிரஸ் ரெயிலில் சொந்த ஊருக்கு வந்து கொண்டிருந்தார். ஜோலார்பேட்டை ரெயில் நிலையத்தில் நிற்பதற்காக ரெயில் மெதுவாக சென்று கொண்டிருந்தது. அப்போது ஓடும் ரெயிலில் இருந்து இறங்க முயன்ற சுதாகர் தவறி விழுந்து, ரெயிலுக்கும், பிளாட்பாரத்திற்கும் இடையே சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து தகவல் அறிந்ததும் ஜோலார்பேட்டை ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராஜேந்திர பாலாஜி வழக்கை சிபிஐ வசம் ஒப்படைக்க சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஜன.8

கடந்த அதிமுக ஆட்சியில் பால்வளத்துறை அமைச்சராக இருந்த ராஜேந்திர பாலாஜி மற்றும் அதிமுக முன்னாள் நிர்வாகியான விஜய நல்லதம்பி ஆகியோர் ஆவின் உள்ளிட்ட அரசு துறைகளில் வேலை வாங்கித் தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டதாக சாத்துரைச் சேர்ந்த ரவீந்திரன் என்பவர் விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளித்தார். இந்த புகாரின்பேரில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி, விஜய நல்லதம்பி ஆகியோருக்கு எதிராக விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்திருந்தனர்.

கடந்த 2021ம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ள இந்த வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி ரவீந்திரன் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அதில், ராஜேந்திர பாலாஜி முன்னாள் அமைச்சர் என்பதாலும், அவரது அரசியல் செல்வாக்கு காரணமாகவும் இந்த வழக்கில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை, என குற்றம் சாட்டியிருந்தார். இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த ஐகோர்ட்டு, ராஜேந்திர பாலாஜிக்கு எதிரான வழக்கில் விரைந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து அறிக்கை தாக்கல் செய்ய விருதுநகர் மாவட்ட போலீசாருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதி பி.வேல்முருகன் முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது ராஜேந்திர பாலாஜி முன்னாள் அமைச்சர் என்பதால் அவருக்கு எதிராக வழக்குத் தொடர அரசின் அனுமதி பெறும் நடைமுறைகள் நிலுவையில் இருந்துவருவதாக போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு அதிருப்தி தெரிவித்த நீதிபதி பி.வேல்முருகன், இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உத்தரவிட்டும், அந்த உத்தரவை அமல்படுத்தாத காரணத்தால் அந்த உத்தரவை ரத்து செய்கிறேன். தமிழக போலீசாருக்கு ஐகோர்ட்டை பிறப்பிக்கும் உத்தரவை அமல்படுத்த நேரமில்லாத காரணத்தால்,

முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி உள்ளிட்டோருக்கு எதிரான இந்த வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றுகிறேன்.

எனவே விருதுநகர் மாவட்ட போலீசார் வழக்கு ஆவணங்களை சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும், என அறிவுறுத்தினார்.

# பள்ளி மாணவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் கைது

ஈரோடு, ஜன.8

ஈரோடு மாவட்டம் புஞ்சைபுளியம்பட்டி பகுதியை சேர்ந்த 15 வயது பள்ளி சிறுவன் ஒருவன், பள்ளி முடிந்ததும் வீட்டுக்கு செல்வதற்காக பஸ் நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தான். அப்போது அங்கு வந்த அதே பகுதியை சேர்ந்த கார்த்தி (36) என்பவர் சிறுவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுவன் கூச்சலிட்டான். சிறுவனின் சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம்பக்கத்தினர் கார்த்தியை பிடித்து புஞ்சைபுளியம்பட்டி போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கார்த்தியை கைது செய்தனர். ஏற்கனவே கார்த்தி மீது சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி போலீஸ் நிலையங்களில் 8க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளதாக போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மணப்பெண் பிடிக்காததால் பெயிண்டர் தற்கொலை

குமரி, ஜன.8

குமரி மாவட்டம் கொல்லங்கோடு அருகே உள்ள சாத்தன்கோடு வடக்கேதோப்பு பகுதியை சேர்ந்த ராஜு மகன் ராஜேஷ் (வயது 40), பெயிண்டர். இவருக்கு திருமணம்செய்துவைக்க உறவினர்கள் பல இடங்களில் பெண் பார்த்து வந்தனர். இந்த நிலையில் கேரள மாநிலம் பரிசுவைக்கல் பகுதியை சேர்ந்த ஒரு இளம்பெண்ணுக்கும் ராஜேசுக்கும் திருமணம்செய்துவைக்க உறவினர்கள் முடிவு செய்தனர்.

இதற்கான நிச்சயதார்த்தமும் நடந்து முடிந்தது. இவர்களது திருமணம் வருகிற 9ந் தேதி நடைபெறுவதாக இருந்தது. இதையடுத்து இருவீட்டாரும் திருமண ஏற்பாடுகளை கவனித்து வந்தனர். இந்தநிலையில் தனக்கு நிச்சயம் செய்யப்பட்ட பெண் ஒல்லியாக இருப்பதாகவும், அவரை பிடிக்கவில்லை என கூறியும் ராஜேஷ் கடந்த சில நாட்களாக மனவேதனையில் இருந்துள்ளார். அவரை உறவினர்கள் தேற்றி வந்தனர்.

இந்தநிலையில் நேற்று மாலையில் ராஜேஷ் தனது வீட்டின் பக்கத்தில் உள்ள சித்தி வீட்டுக்கு சென்றார். அங்கு வீட்டில் யாரும் இல்லாத நிலையில் கதவு திறந்து கிடந்துள்ளது. இதையடுத்து வீட்டுக்குள் சென்ற ராஜேஷ் படுக்கை அறையில் மின்விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். வெளியே சென்றிருந்த சித்தி மற்றும் குடும்பத்தினர் வீட்டுக்கு வந்த போது இதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து கொல்லங்கோடு போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து பிணத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் ராஜேஷ் தற்கொலை செய்வதற்கு முன்பு எழுதிய ஒரு கடிதம் கண்டெடுக்கப்பட்டது. அந்த கடிதத்தில், 'எனது சாவுக்கு யாரும் காரணம் இல்லை. எனக்கு வாழ பிடிக்கவில்லை' என எழுதி இருந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

இதுகுறித்து ராஜேஷின் தந்தை ராஜு கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். 4 நாளில் திருமணம் நடைபெற இருந்த நிலையில் மணப்பெண்ணை பிடிக்காததால் பெயிண்டர் தற்கொலை செய்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பொங்கல் பண்டிகை: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு 9 நாட்கள் விடுமுறை



ஈரோடு, ஜன.8

தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டத்தில் தான் அதிகப்படியாக மஞ்சள் பயிரிடப்பட்டு வருகிறது. விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த மஞ்சளை விற்பனைக்காக பெருந்துறை அருகே கருமாண்டிசெல்லிபாளையத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஈரோடு செம்மாம்பாளையத்தில் உள்ள மஞ்சள் மார்க்கெட் மற்றும் ஈரோடு, கோபி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு கொண்டு செல்கிறார்கள். அங்கு ஏலம் மூலம் மஞ்சள் விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு மட்டுமின்றி வெளிமாநிலங்களை சேர்ந்த வியாபாரிகளும் ஏலத்தில் கலந்துகொண்டு மஞ்சளை வாங்கி செல்கிறார்கள். இந்த நிலையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுகளுக்கு வருகிற 11ந்தேதி முதல் 19ந் தேதி வரை 9 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

13ந்தேதி முதல் 17ந்தேதி வரை மஞ்சள் மார்க்கெட்டுகளுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. 11, 12ந்தேதி மற்றும் 18, 19ந்தேதி சனி, ஞாயிற்றுக்கிழமை என்பதால் அந்த நாட்களில் மஞ்சள் ஏலம் நடைபெறாது. எனவே ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு தொடர்ந்து 9 நாட்கள் விடுமுறைக்கு விடப்பட்டுள்ளது. அதன் பின்னர் வருகிற 20ந்தேதி முதல் மஞ்சள் மார்க்கெட் வழக்கம்போல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக தமிழ்நாடு திகழ்கிறது: கவர்னர் உரையில் பெருமிதம்



சென்னை, ஜன.8

தமிழக சட்டசபையின் இன்றைய நிகழ்வில் கவர்னர் உரையில் இடம் பெற்றிருப்பதாவது:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் தமிழ்நாடு இந்தியாவின் மாநிலமாகத் தொடர்ந்து திகழ்ந்து தமிழ்நாட்டில் உள்ள 36 அரசு முன்னணி வருகிறது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 299 அரசு பொது மருத்துவமனைகள், 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8,713 துணை சுகாதார நிலையங்களின் மூலம் வலுவான மருத்துவக் கட்டமைப்பை நாம் உருவாக்கியுள்ளோம்.

இதன் மூலம், பல வளர்ந்த நாடுகளுக்கு இணையாக ஒப்பிடக்கூடிய வகையில், தமிழ்நாட்டின் மருத்துவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையிலான விகிதம் 2.5.1000 என்ற உயர் அளவில் அமைந்துள்ளது. அண்மை ஆண்டுகளில் மருத்துவத் துறை கட்டமைப்பு, மருத்துவச் சேவைகளின் மேம்பாடு மற்றும் தரமான மருத்துவச் சேவைகள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிசெய்திடத் தேவையான நிதியை அரசு ஒதுக்கி வருகிறது.

இத்தகைய முயற்சிகள் அனைத்தும் மாநிலத்தின் பல்வேறு சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்தியுள்ளன. மேலும் உலகெங்கிலும் இருந்து ஆண்டுதோறும் சுமார் 15 லட்சம் நபர்கள் உயர்தர சிகிச்சை பெற்றிட தமிழ்நாட்டிற்கு வருகைபுரிவதற்கும் இவை வழிவகுத்துள்ளன. இதனால், உயர்தர மருத்துவ சிகிச்சைகளை சிறப்பாக வழங்கி, இந்தியாவின் மருத்துவத் தலைநகரமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. மக்கள் தங்கள் இல்லங்களிலிருந்தே கட்டணமில்லா மருத்துவச் சேவைகளை எளிதில் பெறும் வகையில், தமிழ்நாடு அரசு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வரும் மக்களைத் தேடி மருத்துவம் என்ற முன்னோடித் திட்டத்திற்காக, 2024ம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருது என்ற மிகப்பெரிய அங்கீகாரத்தை ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் தமிழ்நாட்டிற்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இது வரை 2 கோடி நபர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மாநில அரசின் நிதிநிலை கடுமையாக பாதிப்பு கவர்னர் உரையில் தகவல்



சென்னை, ஜன.8

தமிழக சட்டசபையின் இன்றைய கவர்னர் உரையில் இடம்பெற்றுள்ளதாவது:

தேசிய அளவில் முத்திரை பதித்த பல்வேறு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்திய வரலாறு தமிழ்நாட்டிற்கு உண்டு. இம்முயற்சிகளுக்கெல்லாம் மகுடம் சூட்டும் விதமாக, நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தைதொடங்கி தமிழ்நாட்டின் பெயரை வரலாற்றின் பொன்னேடுகளில் பொறிக்கச் செய்துள்ளார்.

இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ், அனைத்து அரசு தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கும் சூடான, சத்தான காலை உணவு தினந்தோறும் வழங்கப்படுகிறது. இதனால், அவர்களின் வருகையும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது மட்டுமின்றி, ஊட்டச்சத்தும் அதிகரித்து, வகுப்பறையில் அவர்களின் கவனிக்கும் திறனும் மேம்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, கிராமப்புறங்களில் உள்ள 3,995 அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக, தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 34,987 தொடக்கப் பள்ளிகளில் 17.53 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகளின் நலன் மற்றும் கல்வி வளர்ச்சி மீது இந்த அரசு கொண்டுள்ள அக்கறையையும், அசைக்க முடியாத உறுதிப்பாட்டினையும் எடுத்துக்காட்டும் வகையில் இத்திட்டம் விளங்குகிறது.

மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதில் மாநில அரசு இவ்வாறு உறுதியுடன் செயல்பட்டு வரும் நிலையில், மாநிலத்தின் முயற்சிகளுக்கு மத்திய அரசு தேவையான ஆதரவினை வழங்கவில்லை. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை விடுவிக்கக் கோரி தொடர்ந்து முறையிட்டும், புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்காததைக் காரணமாகக் கூறி, மத்திய அரசு நடப்பு ஆண்டில் இது வரை எந்தவொரு நிதியையும் விடுவிக்கவில்லை.

2,152 கோடி ரூபாய் அளவில் உள்ள இந்நிலுவைத் தொகையானது, ஆசிரியர்களின் ஊதியம், பள்ளிக் கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் கல்விக் கட்டணத்தைத் திருப்பிச் செலுத்துதல் உள்ளிட்ட பள்ளிகளின் பல்வேறு செயல்பாடுகளுக்கு மிகவும் இன்றியமையாததாகும். மத்திய அரசு இந்த நிதியை வழங்காததால், தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து மாநில அரசே இத்திட்டத்திற்கான ஒட்டுமொத்தச் செலவையும் ஏற்கவேண்டியுள்ளது. இதனால், மாநில அரசின் நிதிநிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

44 லட்சம் மாணவர்கள், 22 லட்சம் ஆசிரியர்கள் மற்றும் 21,276 பணியாளர்களின் எதிர்காலம் ஆகியவை இந்நிதி உரிய நேரத்தில் விடுவிக்கப்படுவதையே சார்ந்துள்ளதால், ஆசிரியர்கள் மற்றும் மாணவர் நலன் காக்க மத்திய அரசு இந்நிதியை விரைவில் விடுவிக்கும் என்று மாநில அரசு நம்புகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சட்டப்பேரவை நடவடிக்கைகள் தணிக்கை செய்யப்பட்டிருப்பது அவசரகாலத்தை நினைவூட்டுகிறது கவர்னர்



சென்னை, ஜன.8

தமிழக சட்டசபை கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. இதையொட்டி பல்வேறு கட்சிகளை சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் அவைக்கு வருகை தந்தனர். கூட்டத்தொடரை முன்னிட்டு, சபாநாயகர், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோரும் அவைக்கு வருகை தந்தனர்.

இதையடுத்து ஆண்டின் முதல் கூட்டத்தொடருக்காக சட்டசபை கூடியது. சட்டசபைக்கு வருகை தந்த கவர்னர் ஆர்.என். ரவிக்கு சபாநாயகர் அப்பாவு பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு தேசிய கீதம் பாட வேண்டும் என்று கவர்னர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார். ஆனால் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. இதற்கு அதிருப்தி தெரிவித்து கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில், உரையாற்றாமல் சட்டசபையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி புறப்பட்டுச் சென்றார். இதனால் அவையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் இது தொடர்பாக கவர்னர் மாளிகை வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

இன்றுதமிழ்நாடு மாநில சட்டப்பேரவை நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக தணிக்கை செய்யப்பட்டிருப்பது அவசரகாலத்தை நாட்டுக்கு நினைவூட்டுகிறது. மக்கள் குறிப்பாக தமிழ்நாட்டின் சகோதர, சகோதரிகள் பேரவையின் உண்மையான நடவடிக்கைகள், அதில் உள்ள அவர்களின் பிரதிநிதிகளின் நடத்தை ஆகியவற்றை அறிவதில் இருந்து விலக்கப்பட்டனர். அதற்கு பதிலாக மாநில அரசின் வெட்டப்பட்ட காட்சிகள் மட்டுமே வழங்கப்பட்டன.

தேசிய கீதம் தொடர்பான அடிப்படைக் கடமையைப்புறக்கணித்ததன் மூலம் அரசியலமைப்பு அவமதிக்கப்பட்டது மட்டுமன்றி, அரசியலமைப்புச் சட்டம் உறுதிசெய்யப்பட்ட பத்திரிகை சுதந்திரத்தின் அடிப்படை உரிமையும் வெட்கக்கேடான முறையில் நசுக்கப்பட்டது. இது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக சட்டசபையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி வெளியேறியது குறித்து கவர்னர் மாளிகை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

அதில், "மொழி, கலாச்சாரம் மற்றும் மரபுகள் உட்பட தமிழ்நாட்டின் செழுமையான கலாச்சார பாரம்பரியத்தின் மீதான தனது மாறாத அன்பு, மரியாதை மற்றும் போற்றுதலை தமிழக கவர்னர் மீண்டும் வலியுறுத்துகிறார். "தமிழ்தாய் வாழ்த்து" என்ற தமிழ் மாநில பாடலின் புனிதத்தை தமிழக கவர்னர் எப்போதும் நிலைநாட்டி, ஒவ்வொரு நிகழ்விலும் பயபக்தியுடன் பாடுகிறார். உலகின் பழமையான மற்றும் மிகவும் புகழ்பெற்ற மொழியான தமிழ், எண்ணற்ற இந்தியர்களின் இதயங்களில் ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது, இந்த உணர்வை கவர்னர் முழு மனதுடன் பகிர்ந்து கொள்கிறார். மாநிலத்திற்குள்ளும் தேசிய அளவிலும் தமிழ் கலாச்சாரம் மற்றும் மொழியை மேம்படுத்துவதற்கு கவர்னர் ஒவ்வொரு வகையிலும் ஆதரவு அளித்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தை மதித்து, அரசியல் சட்டக் கடமைகளைப் பின்பற்றுவது கவர்னரின் கடமை. தேசிய கீதத்திற்கு மரியாதை அளிப்பது அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அடிப்படைக் கடமை, அது தேசியப் பெருமைக்குரிய விஷயமாகும். நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநில சட்டசபையிலும் கவர்னர் உரையின் தொடக்கத்திலும் முடிவிலும் தேசிய கீதம் பாடப்படுகிறது அல்லது இசைக்கப்படுகிறது. தேசிய கீதக் குறியீட்டின்படியும் இது கட்டாயம். முன்கூட்டியே பல முறை நினைவூட்டல்களை தெரிவித்த பிறகும், இந்தக் கோரிக்கைகள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டது வருத்தமளிக்கிறது.

இன்று (06.01.2025), கவர்னர்உரையின்தொடக்கத்தில் தேசிய கீதம் பாடப்படாமல் அல்லது இசைக்கப்படாமல் இருந்தபோது, அவையின் அரசியலமைப்பு கடமைகளை கவர்னர் மரியாதையுடன் நினைவூட்டி, தேசிய கீதம் பாடப்படுவதற்கு அல்லது இசைக்கப்படுவதற்கு முதல்அமைச்சர் மற்றும் சபாநாயகரிடம் வேண்டுகோள்விடுத்தார். ஆனால், அது திட்டவட்டமாக மறுக்கப்பட்டது.

கவர்னர் உரையின் தொடக்கத்தில் தேசிய கீதம் பாடப்படாமல் அல்லது இசைக்கப்படாமல் இருப்பது அரசியல் சாசனம் மற்றும் தேசிய கீதத்தை அவமதிக்கும் செயலாகும். இதனால் அதிர்ச்சியடைந்த கவர்னர், அவையை விட்டு வெளியேறினார். தமிழரின் பெருமையை நிலைநிறுத்துவதுடன் அரசியலமைப்பு விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கும், அனைத்து அரசு விழாக்களிலும் தேசிய கீதத்துக்கான மரியாதையை மீட்டெடுப்பதற்கும் கவர்னர்தனது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அதிக வாக்காளர்கள் கொண்ட தொகுதி சோழிங்கநல்லூர்



சென்னை, ஜன.8

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, கடந்த அக்டோபர் மாதம் வாக்காளர்பட்டியல் திருத்தப் பணி துவங்கியது. அதன்படி 2024ம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் தேதி முதல் அக்டோபர் 18ம் தேதி வரை, வாக்காளர் பட்டியலைசரிபார்த்தல், புகைப்பட அடையாள அட்டைகளில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல் மற்றும் தரமான புகைப்படங்களை இணைத்தல் போன்ற பணிகள் இந்திய தேர்தல் ஆணையத்தின் கீழ் செய்யப்பட்டன.

அதன் பிறகு அக்டோபர் 29ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, அன்று முதல் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கான விண்ணப்பங்கள் நவம்பர் 28ந்தேதி வரை பெறப்பட்டது. அதன் பின்னர் திருத்தங்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு நவம்பர் 29ந்தேதி முதல் கடந்த 24ந்தேதி வரை பரிசீலனை நடைபெற்றது. இந்த நிலையில் தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

அதன்படி தமிழகத்தில் 6 கோடியே 36 லட்சத்து 12 ஆயிரத்து 950 வாக்காளர்கள் இருக்கின்றனர். 3 கோடியே 11 லட்சத்து 74 ஆயிரத்து 27 ஆண் வாக்காளர்களும், 3 கோடியே 24 லட்சத்து 29 ஆயிரத்து 803 பெண் வாக்காளர்களும், 9 ஆயிரத்து 120 மூன்றாம் பாலின வாக்காளர்களும் இருக்கின்றனர்.

இறுதி வாக்காளர் பட்டியலின்படி செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தமிழகத்தில் அதிக வாக்காளர்களை கொண்டுள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 6 லட்சத்து 90 ஆயிரத்து 958 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண் வாக்காளர்கள் 3 லட்சத்து 45 ஆயிரத்து 184 பேர், பெண் வாக்காளர்கள் 3 லட்சத்து 45 ஆயிரத்து 645 பேர். மேலும், மூன்றாம் பாலினத்தவர்கள் 291 பேர்.

இதேபோல் நாகப்பட்டினம் மாவட்டத்திற்குட்பட்ட கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி தமிழகத்தில் குறைந்த வாக்காளர்களை கொண்டுள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 1 லட்சத்து 76 ஆயிரத்து 505 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண் வாக்காளர்கள் 86 ஆயிரத்து 456 பேர், பெண் வாக்காளர்கள் 90 ஆயிரத்து 45 பேர் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்கள் 4 பேர்.

இதற்கு அடுத்தபடியாக இரண்டாமிடத்தில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1 லட்சத்து 78 ஆயிரத்து 980 உள்ளனர்.

# ஆளுநர் மீது பழி சுமத்துவது திமுக அரசுக்கு வாடிக்கையாகிவிட்டது அண்ணாமலை

சென்னை, ஜன.8

தமிழக சட்டசபையில் இன்று உரையை புறக்கணித்து ஆளுநர் ஆர்.என்.ரவி சென்றது தொடர்பாக முதலமைச்சர் உள்பட பல்வேறு அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் சட்டமன்றத்தில் பின்பற்ற வேண்டிய விதிகளைச் சுட்டிக்காட்டியதற்காக, மாண்புமிகு தமிழக ஆளுநர் மீது பழி சுமத்துவது வாடிக்கையாகிவிட்டது என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். இது குறித்து மேலும் அவர் கூறியதாவது:

திமுக அரசு, தங்கள் நிர்வாகத் தோல்வியை மறைக்கவும், சட்டம் ஒழுங்கு சீர்குலைவினால் ஏற்பட்டுள்ள பொதுமக்களின் கோபத்தைத் திசை திருப்பவும், சட்டமன்றத்தில் பின்பற்ற வேண்டிய விதிகளைச் சுட்டிக்காட்டியதற்காக, மாண்புமிகு தமிழக ஆளுநர் மீது பழி சுமத்துவது வாடிக்கையாகிவிட்டது.

இன்று, நமது மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பிறகு, தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆனால் திமுக அரசு அதனை மறுத்திருக்கிறது. திமுக அரசுக்குப் பின்வருவனவற்றை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1. கடந்த நவம்பர் 23, 1970 அன்று, மனோன்மணீயம் சுந்தரனார் பிள்ளை அவர்கள் எழுதிய அசல் தமிழ்த்தாய் வாழ்த்தைச் சுருக்கி, திருத்தப்பட்ட பாடலை, மாநில அரசின் தமிழ்த்தாய் வாழ்த்து என, முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் ஒரு அரசாணை மூலம் அறிவித்தார். அரசு தொடர்பான அனைத்துச் செயல்பாடுகள், கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. 2. இருப்பினும், 1991 ஆம் ஆண்டு வரை, தமிழக சட்டசபையில் ஆளுநர் உரைக்கு முன்பாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படவில்லை.

3. 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம், செல்வி ஜெயலலிதா அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது தான், முதல்முறையாக ஆளுநர் உரையின் தொடக்கத்திலும் முடிவிலும், முறையே தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

4. மத்திய அரசின், தேசிய கீதம் தொடர்பான உத்தரவுகளின்படி, மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் நடக்கும் முறையான அரசு நிகழ்ச்சிகளில், ஆளுநர்/ துணைநிலை ஆளுநர் வருகையின் போதும், நிகழ்ச்சியிலிருந்து விடைபெறும்போதும் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். இந்த உத்தரவு, 1971 ஆம் ஆண்டின் தேசிய மரியாதைக்கான அவமதிப்பு தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான பெண்ணுக்கு நீதி வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், பொது மக்களின் கவனத்தை திமுக அரசின் நிர்வாகத் தோல்வியிலிருந்து திசைதிருப்ப முயற்சி செய்ய வேண்டாம் என்றும் தமிழக முதல்வர் திரு முக ஸ்டாலின் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள், வகுத்துள்ள விதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மட்டுமே தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறார். இதனை ஒரு பெரிய சச்சரவாக்க முயற்சிப்பது, திமுக அரசின் தோல்விகளை மடைமாற்றுவதற்காகவே என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆளுநர் உரை தொடங்கும் முன்னரும், நிறைவு பெற்றதும், தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதத்தை வாசிப்பதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே பாஜகவின் நிலைப்பாடு. இவ்வாறு அண்ணாமலை கூறினார்.

# மேட்டூரில் நாளை அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



சென்னை, ஜன.8

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சியில் காணப்படும் மக்களின் அடிப்படைத் தேவைகளை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றவும், சொத்துவரி நிர்ணயித்தல், வரைபட அனுமதியில் உள்ள குளறுபடிகளை உடனடியாகக் களையவும், தூய்மைப் பணியாளர்களின் குறைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணவும், மேட்டூர் நகராட்சி நிர்வாகத்தையும், தி.மு.க அரசையும் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சேலம் புறநகர் மாவட்டத்தின் சார்பில், வருகிற 9ந் தேதி காலை 10 மணியளவில், மேட்டூர் நகராட்சி அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ப. மோகன் தலைமையிலும்; சேலம் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளர், மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் முன்னாள் தலைவருமான சு. இளங்கோவன், மேட்டூர் நகரக் கழகச் செயலாளரும், கழக மாநிலங்களவை உறுப்பினருமான சூ. சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஞானசேகரின் சொத்துகள் குறித்த ஆவணங்களை கேட்டு சென்னை மாநகராட்சி, பத்திரப்பதிவு துறைக்கு SIT நோட்டீஸ்



சென்னை, ஜன.8

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் ஞானசேகரன் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது குண்டம் சட்டம் பாய்ந்துள்ளது. ஞானசேகரன் மீது பல்வேறு கொள்ளை வழக்குகள் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில்தான் சில தினங்களுக்கு முன் சிறப்பு விசாரணைக்குழு அதிகாரிகள் ஞானசேகரன் வீட்டில் சோதனை மேற்கொண்டனர். அப்போது லேப்டாப் மற்றும் ஆவணங்களை கைப்பற்றினர். கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் நகைகள், சொத்துகள் வாங்கியது தொடர்பாக ஞானசேரன் மனைவிகளிடமும் விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில் ஞானசேகரன் வாங்கிய சொத்துகள் குறித்த ஆவணங்களை கேட்டு சிறப்பு புலனாய்வு குழு பத்திரப்பதிவுத்துறை, வருவாய்த்துறை மற்றும் சென்னை மாநகராட்சிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அத்துடன் ஞானசேகரின் வீடு உரிய அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளதாக என்பது குறித்தும் எஸ்.ஐ.டி. ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

# கள்ளச்சாராய உயிரிழப்பு 18 பேரின் குண்டர் சட்டம் ரத்து

சென்னை, ஜன.8

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தொடர்பாக கைது செய்யப்பட்ட 18 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டனர். குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டதை ரத்து செய்யக்கோரி 18 பேர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், எம். ஜோதிராமன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், காலதாமதமாக குண்டர்சட்டத்தில் அடைக்கப்பட்டதையும், ஆவணங்கள் முறையாக வழங்கப்படவில்லை என்பதையும் முன்வைத்து குண்டர் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென வாதிட்டனர்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் ஆறு மாதங்களுக்கு மேல் சிறையில் உள்ள நிலையில் இதற்கு மேலும் அவர்களை குண்டர் சட்டத்தில் சிறையில் வைத்திருப்பதில் என்ன தேவை இருக்கிறது? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். மேலும் நீதிபதிகள், "கள்ளச்சாராய விற்பனை பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் நிலையில் மது விலக்கு துறை என்ன செய்து கொண்டிருக்கிறது? மது விலக்கு போலீசார் பதிவு செய்யும் வழக்குகளில் பாதிக்கும் மேற்பட்டவை ஜோடிக்கப்பட்டவை. முதன்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படுவதில்லை.

கல்வராயன் மலைப்பகுதியில் கள்ளச்சாரயம் தயாரிப்பு மற்றும் விற்பனை பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. மது விலக்கு பிரிவு போலீசார் பல தவறுகளை செய்கின்றனர்.

அவ்வாறு தவறிழைக்கும் அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து தெரியவில்லை என்று கருத்து தெரிவித்தனர். இதற்கு பதிலளித்த அட்வகேட் ஜெனரல் பி.எஸ். ராமன், இந்த கள்ளச்சாராயம் கள்ளக்குறிச்சியில் தயாரிக்கப்படவில்லை. மாதவரத்தில் இருந்து வந்துள்ளது. இதற்கும் கல்வராயன் மலைக்கும் தொடர்பில்லை. இந்த சம்பவம் தொடர்பான விசாரணை சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் வழக்கின் ஆவணங்கள் இன்று அல்லது நாளை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கப்படும். 70 பேர் மரணம், நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிப்பு என 110 நாட்கள் அந்த கிராமமே அசாதாரண நிலையில் இருந்ததன் காரணமாகவே அனைவரும் குண்டர்சட்டத்தில் அடைக்கப்பட்டனர் என்று கூறினார். இதனையடுத்து, மனுதாரர்கள்தரப்பு வாதங்களை ஏற்றுக்கொண்டநீதிபதிகள், குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்தனர். அனைவர் மீதான குண்டர் தடுப்பு சட்டத்தை ரத்து செய்தும் உத்தரவிட்டனர்.

# உண்மைக்கு மாறான தகவல்கள்.. இதனால் தான் உரையை ஆளுநர் புறக்கணித்தாரா? ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, ஜன.8

சட்டசபையின் நடப்பாண்டு முதல் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக சட்டசபைக்குள் நுழைந்த ஆளுநர் ஆர்.என். ரவி உரையாற்றாமல் சட்டசபையில் இருந்து சென்றார். இந்த சம்பவத்திற்கு அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து ஆளுநர் உரையைசபாநாயகர்வாசித்தார்.

இந்நிலையில் பொய்மையின் மறு உருவமாகத் திகழும் ஆளுநர்உரை என முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், ஆளுநர் பேருரை என்பது ஆட்சியாளர்கள் இனி செய்யப் போகின்ற காரியங்களையும், கடைப்பிடிக்க இருக்கின்ற கொள்கைகளின் விளக்கத்தையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் என்றார் பேறறிஞர் அண்ணா அவர்கள், ஆனால். இன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வாசிக்கப்பட்ட ஆளுநரின் உரை பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுக்கு முற்றிலும் முரணாக அமைந்துள்ளது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், திட்டங்களே இல்லாத உரையாக, உண்மைகளைமறைக்கின்ற உரையாக ஆளுநர் உரை அமைந்தள்ளது. ஆளுநர் ஆற்றிய உரை என்று புத்தகத்தில் அச்சிடப்பட்டு இருந்தாலும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குள் ஏற்பட்ட அமளி காரணமாக உணயை வாசிக்காமல் ஆளுநர் சென்றுவிட்டார். ஒருவேனை, ஆளுநர் அவர்கள்இந்த உரையை வாசித்து இருந்தால், அந்த உரையில் இடம்பெற்றுள்ள கருத்துகளுக்கு ஆளுநர்அவர்கள் ஒப்புதல் கொடுத்தது போல் ஆகிவிடும்.

அந்த அளவுக்கு உண்மைக்கு மாறான தகவல்கள் ஆளுநர் உரையில் இடம் பெற்றுள்ளன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரை, "சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது" என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாடு போதைப் பொருட்களின் புகலிடமாக விளங்குகிறது என்பதும்; அன்றாடம் பல கொலை, கொள்ளைகள் நடைபெற்று வருகின்றன என்பதும்; திருநெல்வேலி மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர் கொலை வழக்கு, பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் திரு. ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு, கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கு, வேங்கைவயலில் உள்ள பட்டியல் பிரிவினர் பயன்படுத்திய மேல்நிலைக் குடிநீர் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்டது குறித்த வழக்கு என பல வழக்குகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும்; மருத்துவமனையில் மருத்துவர் தாக்கப்படுவதும், அண்ணா பல்கலைக்கழக மாலாவி அந்தப் பல்கலைக் கழக வளாகத்திலேயே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாவதும் நாடறிந்த உண்மை.

இவற்றையெல்லாம் மறைத்து, சட்டம்ஒழுங்கு சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுகிறது என்ற வாசகம் ஆளுநர் உரையில் இடம் பெற்றிருக்கிறது. ஒரு வேளை, இதன்காரணமாக, ஆளுநர் உரையை ஆளுநர் படிக்காமலேயே புறக்கணிந்துவிட்டாரோ என்ற எண்ணமும் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஆளுநர் உரையின் 58வது பத்தியில், "மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அவர்களது எதிர்பார்ப்புகளுக்கும் மேலாகவே நிறைவேற்றியுள்ளதுடன், குறுகிய காலத்தில் செய்த இச்சாதனைகள் குறித்தும், ஒருபித்த முன்னேற்றம் குறித்தும் இந்த அரசு பெருமிதம் கொள்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கூற்று முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கானபழைய ஓய்வூதியத் திட்டம், இடைநிலை ஆசிரியர்களுக்கான சம வேலைக்கு சம ஊதியம், மருத்துவர்களுக்கான பதவி மற்றும் ஊதிய உயர்வு, சத்துணவுப் பணியாளர்களுக்கான காலமுறை ஊதியம்.

மாதம் ஒரு முறை மின் கட்டணம், கல்விக் கடன் ரத்து, நீட் தேர்வு ரத்து, ரேஷன் கடைகளில் கூடுதலாக உதவாக உகு உளுத்தம் பருப்பு மற்றும் கூடுதலாக ஒரு கிலோ அரிசி, 100 ரூபாய் எரிவாயு மானியம், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கான வஊதிய உயர்வு, ஓய்வு பெற்ற போக்குவரத்து தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு பெட்ரோல் மற்றும் டீசல் விலை குறைப்பு என பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் யதார்த்தம்.

இதற்கு முற்றிலும் முரணாக ஆளுநர் உரையில் தெரிவிப்பதுஎன்பதுமுழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் செயல், ஆளுநர் உரையின் பத்தி 4ல், மகளிர் உரிமைத் தொகை 1.15 கோடி குடும்பங்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 2.20 கோடி குடும்பங்கள் இருக்கின்ற நிலையில், 1.15 கோடி குடும்பங்களுக்கு மட்டும் மகளிர் உரிமைத் தொகை வழங்கியிருப்பது ஒருதலை பட்சமானது. இது தவிர, ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொத்து வரி உயர்வு, குடிநீர் வரி உயர்வுமின்கட்டணஉயர்வு வாகன வரி உயர்வு பத்திரப் பதிவு உயர்வு விலைவாசி உயர்வு என பல்வேறு காரணிகள் மூலம் மாதம் 5,000 ரூபாய் வரை கூடுதல் நிதிச் சுமை சுமத்தப்பட்டிருக்கிறது.

தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 1,000 மின்சாரப் பேருந்துகள் உட்பட, 7,713 பேருந்துகள் புதிதாக வாங்கப்படும் என்றும், 500 பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் நிதிநிலை அறிக்கைகள் வாயிலாக அறிவிக்கப்பட்டன. ஆனால், இதுவரை 2,578 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது அறிவிக்கப்பட்டதில் 33 விழுக்காடு மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது. தி.மு.க. அரசின் எல்லாத் திட்டங்களும் இந்த நிலையில் தான் உள்ளன. நீட் தேர்வு ரத்து என்ற முழக்கத்தை முன்வைத்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. இன்று அதுபற்றி வாய் திறக்காதது ஏழையெளிய மாணவ, மாணவியரை வஞ்சிக்கும் செயல்.

# தமிழகத்தில் 28 மாவட்டங்களில் ஊராட்சிகளுக்கு சிறப்பு அதிகாரிகள் நியமனம் தமிழக அரசு

சென்னை, ஜன.8

ஊரக உள்ளாட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த 2019 மற்றும் 2021ம் ஆண்டுகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

அ.தி.மு.க. ஆட்சியின் போது 2019ம் ஆண்டில் சில மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு அவற்றையும் சேர்த்து 9 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இதனால், 9 மாவட்டங்கள் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சிகளுக்கு கடந்த 2019ம் ஆண்டு டிசம்பரில் தேர்தல் நடைபெற்றது.

அதன்பின், 9 புதிய மாவட்டங்களில் வார்டு மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று, 2021ல் தி.மு.க. ஆட்சி அமைந்ததும் 2022ம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் 2 கட்டங்களாக தேர்தல்கள் நடைபெற்றன.

இந்நிலையில், 2019 டிசம்பரில் தேர்தல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகளுக்கான பதவிக்காலம் கடந்த ஜனவரி 5ந் தேதியுடன் நிறைவு பெற்றது.

இந்நிலையில், பதவிக்காலம் முடியவுள்ள 28 மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகள், வார்டுகள் மறுவரையறை செய்யப்பட உள்ளன.




குறிப்பாக, சில ஊராட்சி பகுதிகளை, பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளில் இணைப்பதற்கான பணிகள் நடக்க வேண்டியுள்ளன.

இதனால், பதவிக்காலம் முடிவடைய உள்ள ஊரக உள்ளாட்சிகளில், சிறப்பு அலுவலர்களை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, மாவட்ட ஊராட்சிகளுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், ஊராட்சி ஒன்றியத்திற்கு ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர், கிராம ஊராட்சிக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் சிறப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கடந்த 1½ ஆண்டில் அரசு மருத்துவ கல்லூரிக்கு 65 உடல்கள் தானம்



மதுரை, ஜன.8

தென் மாவட்டங்களில் மிக முக்கிய மருத்துவமனையாக மதுரை அரசு ஆஸ்பத்திரி உள்ளது. இங்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். இங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கு தனி பிரிவு, மகப்பேறு சிகிச்சைக்கு தனி பிரிவு, சூப்பர் ஸ்பெஷாலிட்டி என அனைத்து வகையான சிகிச்சைகளும் ஒரே இடத்தில் கிடைப்பதால், மதுரை மட்டுமின்றி மதுரையை சுற்றி உள்ள பக்கத்து மாவட்ட மக்களும் அதிக அளவில் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர்.

கடந்த ஆண்டு மதுரை அரசு ஆஸ்பத்திரியில் மூளைச்சாவு அடைந்தவர்களின் விவரம், உடல்கள் தானம் பெற்றது தொடர்பாக ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் கூறியதாவது: "பொதுவாக சாலை விபத்துகளில் சிக்கி மூளைச்சாவு அடையும் நபர்களின் உடல் உறுப்புகள் தானமாக பெறுவது தொடர்பாக, சம்பந்தப்பட்ட உறவினர்களிடம் ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அதன்படி, மதுரை அரசு ஆஸ்பத்திரியில் கடந்த ஆண்டில் மூளைச்சாவு அடைந்த 13 நபர்களிடம் இருந்து இதயம், சிறுநீரகம், கல்லீரல், கண்கள், எலும்பு, தோல் உள்ளிட்ட உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டுள்ளன. இந்த உடல் உறுப்புகள் மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு மட்டுமின்றி சென்னை, கோவை, திருச்சி உள்ளிட்ட இடங்களில் உள்ள அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட நோயாளிகள் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

இதுபோல், மருத்துவ மாணவர்களின் கல்வி பயன்பாட்டிற்காக, இறந்தவர்களின் உடல்கள் தானமாக பெறப்படுகிறது. அதன்படி, கடந்த 1½ ஆண்டில் மதுரை அரசு மருத்துவ கல்லூரிக்கு 65 உடல்கள் தானமாக பெறப்பட்டுள்ளன. இதற்கான முயற்சிகளை மதுரை அரசு ஆஸ்பத்திரியின் இருப்பிட மருத்துவ அதிகாரிகள் மேற்கொண்டு, உடல் தானம் குறித்து தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அதன் விளைவாக உறவினர்கள் யாரும் இல்லாத நிலையில் உயிரிழந்தவர்களின் உடல்களை உறவினர்கள் தாங்களாக முன்வந்து உடலை தானமாக வழங்குவது என கிட்டத்தட்ட 65 உடல்கள் தானமாக பெறப்பட்டு, மதுரை அரசு மருத்துவ கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன. தானமாக பெறப்பட்ட உடல்களில், மதுரை மருத்துவ கல்லூரிக்கு ஆண்டுக்கு 20 உடல்கள் போதுமானது. மீதமுள்ள உடல்கள், ராமநாதபுரம், புதுக்கோட்டை, விருதுநகர் உள்ளிட்ட அரசு மருத்துவகல்லூரிகளுக்கும், அரசு விதிமுறைகளை பின்பற்றி தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. உடல்களை தானமாக வழங்கும் நபர்களை கவுரவிக்கும் வகையில் அவர்களின் உறவினர்களுக்கு பாராட்டு சான்றிதழும், போலீஸ் நிலையங்கள் மூலம் ஒப்படைக்கப்படும் உடல்களுக்கு, சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இதுபோல், மதுரை அரசு ஆஸ்பத்திரியில் கடந்த ஒரு ஆண்டில் 41 சிறுநீரக மாற்று சிகிச்சை செய்யப்பட்டுள்ளன. பல்வேறு அதிநவீன சிறப்பு சிகிச்சைகளின் மூலம், அரசு ஆஸ்பத்திரிக்கு வந்து செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# ஆலங்குடி அருகே விநாயகர் கோவிலில் தீயை விழுங்கும் வினோத வழிபாடு

ஆலங்குடி, ஜன.8

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள மேலப் புள்ளான் விடுதியில் பிரசித்தி பெற்ற கருப்பையா பிள்ளையார் என்கிற கற்பக விநாயகர் கோவில் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் பிள்ளையார் நோன்பு விழா கொண்டாடப்படுவது வழக்கம்.

கார்த்திகைதீபம் முடிந்த 21 நாட்களுக்கு விரத மிருந்து விநாயகருக்கு பிடித்த கொழுக்கட்டை, பொங்கல், எள்ளுருண்டை, அப்பம், சுண்டல் போன்ற 21 பதார்த்தங்களை நாள்தோறும் ஒவ்வொன்றாக படைத்து வழிபாடு செய்வார்கள்.

பின்னர் 22ம் நாள் சதய நட்சத்திரம் சஷ்டி திதி ஒன்று கூடிய நாளில் 21 நாட்கள் படைத்த பதார்த்தங்களையும் செய்து விநாயகருக்கு படைத்து வழிபாடு செய்வர்.



அப்போது பால், தயிர், இளநீர், சந்தனம், தேன் அபிஷேகம் நடைபெறும். இதனை தொடர்ந்து விநாய கருக்கு பிடித்த விநாயகர் அகவல் பாடல்களை பாடியும் விநாயகர் நோன்பு கொண்டாடப்படுவதற்கான கதைகளை கூறியும் வழிபாடு செய்வர்.

இதனைத் தொடர்ந்து மாவிளக்கில் தீயை ஏற்றி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் தீயை விழுங்கும் வழிபாடு செய்வர்.

இவ்வாறு தீயை விழுங்கி வழிபடுவதால் நோய்தீரும், தீயசக்திகள் தொடாது என்றும் பிள்ளைப்பேறு கிடைக்கும் என்றும் நம்பப் படுகிறது. இந்த வினோத வழிபாட்டை அப்பகுதி மக்கள் பயபக்தியுடன் கண்டு களித்தனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் பொங்கல் விழாவிற்கான ஆலோசனைக்கூட்டம்

சிவகங்கை, ஜன.8

சிவகங்கை மாவட்டத்தில் ஜனவரி 2025 ஆம் மாதம் முதல் மே 2025 ஆம் மாதம் வரையுள்ள காலங்களில் நடைபெறவிருக்கும் ஜல்லிக்கட்டு, வடமாடு, மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி ஆகியவைகள் குறித்து, தமிழக அரசின் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு, அதனை விழாக்குழுவினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் முறையாக பின்பற்றுதல் வேண்டும்.

ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பங்களை, அரசிற்கு அனுப்பி, பின்னரே, நிகழ்வு நடத்தப்பட அனுமதிக்க வேண்டுமென்பதால், சம்பந்தப்பட்ட நிகழ்வு நடத்தும் விழாக்குழுவினர் ஒரு மாத காலத்திற்கு முன்னதாகவே மாவட்ட கலெக்டர்க்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பக்க வேண்டும்.

அரசிதழில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கிராமங்களில் மட்டுமே ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி அளிக்கப்படும். ஜல்லிக்கட்டு/வடமாடு நிகழ்ச்சிகளுக்கு உரிய காப்பீடு (ரூ.1கோடி)க்கு உரிய காப்பீட்டு நிறுவனத்திடம் பெற்று அதனை விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும். ஜல்லிக்கட்டு விழா குழுவினர் விழாவிற்கான ஏற்பாடுளை விழா நடைபெறுவதற்கு முன்னர் குறைந்தபட்சம் 24 மணி நேரத்திற்கு முன்பாக அனைத்து பணிகளையும் வழிகாட்டி நெறிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு பூர்த்தி செய்யும் பட்சத்திலேயே ஜல்லிக்கட்டு நடத்திட மாவட்ட நிர்வாகத்தால் இறுதி உத்தரவு வழங்கப்படும்.

பங்கேற்பாளர்கள் குறித்த விவரங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும். விழா அமைப்பாளர்கள் விழாவில் பங்கேற்க உள்ள காளைகளுக்கு எவ்விதமான ஊக்கமருந்துகளோ மற்றும் எரிச்சல் அளிக்கக்கூடிய பொருட்களையோ செலுத்தக்கூடாது. காளைகளின் மீது ஜிகினா துவூதல், கண்களில் எலுமிச்சைச்சாறு பிழிதல், எண்ணெய் தடவுதல் கூடாது.

நிகழ்வுகள் கண்காணிக்கப்படும். மேலும், ஒரே தேதியில் விழா நடத்த விண்ணப்பிக்கப்படும் நேர்வில், முதல் விண்ணப்பம் மட்டும் அந்த தேதியில் நடத்த அனுமதிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 'ஸ்பைடர் மேன்' நட்சத்திரங்கள் ரகசிய நிச்சயதார்த்தம்?



பிரபல ஹாலிவுட் திரைப்பட நடிகை மற்றும் பாடகராக இருப்பவர் ஜெண்டயா. சிறுவயதிலையே திரையுலகில் ஆர்வம் கொண்டு தொலைக்காட்சி தொடர்களில் பணியாற்றி வந்த இவர், டாம் ஹாலண்ட் நடித்த ஸ்பைடர் மேன்: ஹோம் கம்மிங் படத்தின் மூலம் உலகளவில் பிரபலமானார்.

அதனைத்தொடர்ந்து டாம் ஹாலண்டுடன், ஸ்பைடர் மேன்: பார் பிரம் ஹோம், ஸ்பைடர் மேன்: நோ வே ஹோம் ஆகிய படங்களில் நடித்தார். அதேபோல், டூன் பார்ட் 1, டூன் பார்ட் 2 என பல ஹிட் படங்களிலும் நடித்திருக்கிறார். முன்பிருந்தே டாம் ஹாலண்டும், ஜெண்டயாவும் காதலித்து வருவதாக கூறப்பட்டு வரும்நிலையில் தற்போது இரு நட்சத்திரங்களுக்கும் ரகசியமாக நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கலிபோர்னியாவில் நடைபெற்ற கோல்டன் குளோப் விருது விழாவில் ஜெண்டயா வைர மோதிரத்துடன் கலந்துகொண்டது இதற்கு மேலும் மெருகேற்றி உள்ளது. இதனால், அவர்களின் அதிகாரப்பூர்வ அறிவிப்புக்காக ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

## 9 பந்தில் 35 ரன்கள் விளாசிய வீரர் மீது ரூ. 500 நோட்டுகளை தூவிய ரசிகர் வீடியோ

மகாராஷ்டிரா மாநிலம் பிவண்டி என்ற நகரில் உள்ளூர் கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. இந்த தொடரில் நடந்த போட்டியில் ஒரு வீரர் 9 பந்துகளில் 35 ரன்கள் விளாசியுள்ளார். இவரது ஆட்டத்தை பார்த்து ரசித்த பார்வையாளர் ஒருவர் உடனடியாக மைதானத்திற்குள் நுழைந்து அந்த பேட்ஸ்மேன் மீது ரூ. 500 நோட்டுகளை தூவி பாராட்டினார்.



அதுமட்டுமல்லாமல் அவருக்கு கன்னத்தில் முத்தமிட்டு சென்றார். இதனையடுத்து சுற்றியிருந்த பார்வையாளர்கள் அந்த ரூ.500 நோட்டுகளை எடுத்து செல்ல மைதானத்திற்குள் வந்தனர். அந்த பேட்ஸ்மேனும் பணத்தை பார்வையாளர்களுக்கு எடுத்து கொடுத்தார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## 'எனக்கு நானே சவால் விட விரும்புகிறேன்' பூஜா ஹெக்டே




தெலுங்கு, இந்தி படங்களிலும் நடித்து வரும் பூஜா ஹெக்டே, தமிழில் 'முகமூடி' படம் மூலம் அறிமுகமானார். அதன் பின்னர் விஜய்க்கு ஜோடியாக 'பீஸ்ட்' படத்தில் நடித்து பிரபலமானார். சூர்யாவுக்கு ஜோடியாக 'ரெட்ரோ' படத்திலும், ஷாஹித் கபூருடன் தேவா படத்திலும் நடித்து முடித்துள்ள இவர், தற்போது விஜய்க்கு ஜோடியாக தளபதி 69 படத்தில் நடித்து வருகிறார்.

இதில், தேவா படம் வரும் 31ம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், தனது சினிமா வாழ்க்கை அனுபவத்தை பூஜா ஹெக்டே பகிர்ந்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'என்னை பொறுத்தவரையில், படங்களில் ஒரு பகுதியாக இருப்பதை விட, அந்த கதாபாத்திரமாகவே வாழ்வதுதான் முக்கியம் என்று நினைக்கிறேன். என்னால் என்ன செய்ய முடியுமோ என்பதை தாண்டி எனக்கு நானே சவால் விட விரும்புகிறேன். என்னைத் தேடி வரும் அதுபோன்ற வாய்ப்புகளுக்காக நன்றியோடு இருக்கிறேன். இன்னும் விதவிதமான கதாபாத்திரங்களில் நடிக்க எனக்கு ஆசை இருக்கிறது. அதற்காகக் காத்திருக்கிறேன்" என்றார்.

## 'கேம் சேஞ்சர், ஆர்.ஆர்.ஆர்ஐ விட 2 மடங்கு வசூல் செய்யும்' சல்மான் கான்



இயக்குனர் ஷங்கர் தற்போது ராம் சரணை வைத்து கேம் சேஞ்சர் படத்தை இயக்கி உள்ளார். கியாரா அத்வானி கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படம் வரும் 10ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. தற்போது இதன் புரமோஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி, ராம் சரண் மற்றும் கியாரா அத்வானி, சலமான் கான் தொகுப்பாளராக இருக்கும் பிக்பாஸ் இந்தி நிகழ்ச்சியில் படத்தின் புரமோஷனுக்காக கலந்துகொண்டனர்.

அப்போது சல்மான் கான், ராம் சரண் முன்னதாக நடித்திருந்த ஆர்.ஆர்.ஆர் படத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக கேம் சேஞ்சர் வசூல் செய்யும் என்று கூறினார்.

ராஜமவுலி இயக்கத்தில், ஜூனியர் என்.டி.ஆர் மற்றும் ராம் சரண் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து கடந்த 2022ம் ஆண்டு வெளியான படம் ஆர்.ஆர்.ஆர். இப்படம் ரூ. 1,150 கோடிக்கு மேல் வசூலித்தது மட்டுமில்லாமல் கோல்டன் குளோப் மற்றும் ஆஸ்கர் விருதுகளயும் வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## நமக்கு சூப்பர் ஸ்டார்கள் தேவையில்லை இந்திய முன்னாள் வீரர்



இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரை 31 என்ற கணக்கில் இழந்துள்ளது. இதனால் 10 வருடங்களுக்குப்பின் பார்டர் கவாஸ்கர் கோப்பையை இந்தியா இழந்துள்ளது. அத்துடன் ஆஸ்திரேலிய மண்ணில் தொடர்ச்சியாக 3வது கோப்பையை கைப்பற்ற வேண்டும் என்ற கனவும் முடிவுக்கு வந்தது.

சமீபத்தில் சொந்த மண்ணில் நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் ஒயிட்வாஷ் ஆன இந்தியா, தற்போது பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரிலும் தோல்வியை தழுவியதால் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறாமல் வெளியேறியுள்ளது. இந்த தோல்விகளுக்கு முன்னணி வீரர்களான ரோகித் மற்றும் விராட் பேட்டிங்கில் ஜொலிக்காதது முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அணிக்கு சூப்பர் ஸ்டார்கள் தேவை இல்லை எனவும், சிறப்பாக விளையாடுபவர்களே அணிக்கு தேவை எனவும், சூப்பர் ஸ்டார் ஆக நினைப்பவர்கள் வீட்டில் இருந்தே கிரிக்கெட் விளையாடி கொள்ளலாம் என இந்திய முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, சூப்பர் ஸ்டார் கலாசாராம் உருவாகி வருகிறது.

நமக்கு சூப்பர் ஸ்டார்கள் தேவை இல்லை, சிறப்பாக விளையாடுபவர்களே தேவை. சூப்பர் ஸ்டார் ஆக நினைப்பவர்கள் வீட்டில் இருந்தே கிரிக்கெட் விளையாடி கொள்ளவும், இந்திய அணிக்கு வரவேண்டாம். அடுத்ததாக இங்கிலாந்து தொடர் வரவிருக்கிறது. இங்கிலாந்து தொடருக்கான இந்திய அணியில் யாரெல்லாம் இடம் பிடிப்பார்கள், என்ன நடக்குமென அனைவரும் பேசுகிறார்கள். என்னை பொறுத்தவரை யார் நன்றாக விளையாடுகிறார்களோ அவர்களே அணியில் இடம் பெற வேண்டும். ஒருவரின் மதிப்பை வைத்து தேர்வு செய்ய முடியாது. அப்படி செய்தால் கபில் தேவ், சுனில் கவாஸ்கரையும் அழைத்து செல்லுங்கள். சூப்பர் ஸ்டார் கலாசாரம் இந்திய அணியை முன்னேற்றப் பாதைக்கு அழைத்து செல்லாது.

விராட் கோலி, ரோகித் சர்மா என யாராக இருந்தாலும் அவர்களது செயல்பாடுகளை வைத்து தேர்வு செய்யுங்கள். விளையாட்டைவிட யாரும் பெரியவர்கள் கிடையாது. அவர்களது மனதில் தங்களைப் பெரிய சூப்பர்ஸ்டாராக நினைத்தாலும் பரவாயில்லை. இந்திய அணியை முன்னோக்கி கொண்டு செல்ல இதை செய்தாக வேண்டும். நான் அவர்களை கழட்டிவிட சொல்லவில்லை. இங்கிலாந்து தொடருக்கு முன்பாக அவர்களை கவுண்டி கிரிக்கெட் அல்லது வேறு எதாவது உள்ளூர் போட்டிகளில் முதல்தர கிரிக்கெட் விளையாட வேண்டும். இது தேர்வுக்குழுவுக்கு சவாலாக இருந்தாலும் இப்போதே விழித்துக்கொள்ள வேண்டும்.

யாருக்கு எவ்வளவு வாய்ப்பு கிடைக்கிறது. அதில் எப்படி விளையாடுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அணியில் எடுப்பதும் உட்காரவைப்பதும் நடக்க வேண்டும். ஏனெனில் இந்தியாவில் அதிக திறமைசாலிகள் இருக்கிறார்கள். விராட் கோலியின் எண்கள் கவலையளிக்கிறது. எனக்கு அதிர்ச்சியாகவும் இருக்கிறது. ஒரு இளைஞருக்கு வாய்ப்பு தந்தாலும் அவரும் கோலியின் சாதனைகளை நிகழ்த்துவார். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.